# முன்னுரை

கடந்த ஆண்டு கொரோனா தொற்று பரவத் தொடங்கியவுடன் பாரதத்தின் நிலை என்ன ஆகும் என்பதை அறிய உலகத்தின் கவனம் நம் மீது திரும்பியது. உலகிலேயே மக்கள் தொகையில் இரண்டாமிடம் வகிக்கும், 140 கோடி மக்களைக் கொண்ட நம் நாட்டில் இது எளிதாகப் பரவி பல லட்சக்கணக்கான மக்களை பலி கொள்ளும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் பாரதம் அதை அற்புதமாகச் சமாளித்தது என்கிறார் பிரதமர் திரு. நரேந்திர மோடி.

அரசாங்கம் ஒருபுறம் மக்களைப் பாதுகாக்கும் பணியை திறம்படச் செய்தாலும், மறுபுறம் பல தொண்டு நிறுவனங்களும் இந்தப் பணியில் தங்களை இணைத்துக் கொண்டதால் இந்தப் பணி எளிதானது.

சேவாபாரதி தமிழ்நாடு அமைப்பின் தொண்டர்களுக்கு 2004 சுனாமி, 2015 சென்னை வெள்ளம் ஆகியவற்றை எதிர்கொண்ட அனுபவம் இருந்ததால், முதல் அலை தோன்றியவுடனேயே உடனடியாக களத்தில் இறங்கினர். ஆரம்பத்தில் அன்னதானத்துடன் துவங்கிய பணி, பிறகு மக்களுக்குத் தேவையான முகக்கவசம், சானிடைசர், கபசுரக் குடிநீர், மளிகைப் பொருட்கள் வினியோகம் என நீண்டது.

இந்த ஆண்டு நிகழ்ந்த இரண்டாவது அலையின்போது, மருத்துவ உபகரணங்களுக்கு தேவை அதிகமாக இருந்ததால், அவற்றைக் கொடுப்பதில் சேவாபாரதி கவனம் செலுத்தியது.

அடுத்து கொரோனா மூன்றாவது அலை தாக்கும் என்கிறார்கள். அதனையும் எதிர்கொள்ள ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட பல அமைப்புகளுடன் இணைந்து ஊராட்சிதோறும் குழு அமைத்து, அவர்களுக்கு மருத்துவ தற்காப்புப் பயிற்சி அளித்து, கொரோனா இல்லாத ஊராட்சியாக மாற்ற சிறப்பு முயற்சி எடுத்து வருகிறது சேவாபாரதி.

மூன்றாவது அலை மட்டுமல்ல, இனிவரும் அனைத்து அலையானாலும், நோய்த் தொற்றை நாம் திறம்பட எதிர்கொள்வோம் என்பது உறுதி.

இந்தப் புத்தகத்தில், கொரோனா முதல் அலை, இரண்டாம் அலை காலத்தில் தமிழகத்தின் வட மாவட்டங்களில் நாம் செய்த சேவைப் பணிகளைப் பற்றி விரிவாகத் தொகுத்து வெளியிட்டுள்ளோம். அத்துடன் சேவாபாரதி தொடர்ந்து செய்துவரும் பணிகளையும் இங்கு இணைத்துள்ளோம்.

இந்தப் புத்தகத்திற்கு ஆசியுரை வழங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் உபதலைவர் போற்றுதலுக்குரிய சுவாமி கௌதமானந்த மகராஜ் அவர்களுக்கும், சின்மயா மிஷன், சென்னை ஆன்மிக வழிகாட்டி போற்றுதலுக்குரிய சுவாமி மித்ரானந்தா மகராஜ் அவர்களுக்கும் எங்களது மகிழ்ச்சியை தெரிவித்து கொள்கிறோம்.

சேவாபாரதி தமிழ்நாடு செய்துவரும் இந்த சமுதாயப் பணியில் தாங்களும் இணைந்து பாரதத்தை உலகின் குருவாக உருவாக்கும் உன்னத முயற்சியில் ஈடுபட அன்புடன் அழைக்கிறோம்.

**ஆகஸ்ட் 2021**
**சென்னை**

# PREFACE

The moment Corona began to spread and the world's attention turned towards us to know what would happen to India. The reason is that in our highly populated country (140 crore of population), it was expected to spread easily and kill millions of people. But India has managed it well, says Prime Minister Shri Narendra Modi.

While the government effectively did the job of protecting the people on the one hand, on the other hand, many NGOs joined the task and this work became easier.

Sevabharathi Tamilnadu volunteers had experience of handling disaster relief activities during 2004 post Tsunami and the 2015 Chennai floods and immediately swung into action as soon as the first wave appeared. The services initially started with *annadhanam* (free food distribution) and then extended to the supply of masks, sanitizer, kabasura kashayam and grocery kits to the needy.

Sevabharathi focused on providing medical devices in the second wave as the demand for the same was high.

It is said that there will be a third wave next. To counter this, Sevabharathi is working with the RSS and several other organizations to form a panchayat level committee, impart medical self protection training to them and make them a corona-free panchayat.

We are sure to face infection effectively from all the waves that come from now on, not just the third wave.

In this book, we have published in detail the services we have done during the first and second wave of corona in northern parts of Tamil Nadu. We have also given the details of the services that Sevabharathi is already doing.

We would like to express our profound gratitude to our respectable Swami Gautamananda Maharaj, Vice President of Sri Ramakrishna Math & Mission and Swami Mitrananda Maharaj, Spiritual Mentor, Chinmaya Mission, Chennai for their blessings to this book.

We kindly request you to join the social services being done by Sevabharathi Tamilnadu and make Bharat the guru of the world.

**August, 2021**
**Chennai**

# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. *[திருக்குறள் 212]*

## பொருள்:

ஒருவன் முயன்று திரட்டிய பொருள் தகுதியுடையோர் நலனுக்கு உதவிடும் பொருட்டே பயன்பட வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவாபாரதி தமிழ்நாடு செய்த முதல் பணி அன்னதானம் வழங்கியது தான். சென்னை, சேலம், ஈரோடு, பண்ருட்டி, சிதம்பரம் ஆகிய ஊர்களில் சமையற்கூடங்கள் அமைக்கப்பட்டன. சேலத்தில் பெரிய அளவில் சமையற்கூடம் அமைக்கப்பட்டு, தொடர்ந்து 40 நாட்கள் உணவு சமைக்கப்பட்டு, அன்னதானப் பொட்டலங்கள் பரிமாறப்பட்டன. தமிழக முழுவதும் சுமார் 250 இடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டன.







# ALL BEINGS ARE EVOLVED FROM FOOD

**Donating food is the most auspicious and sacred of all the charitable activities.**

**Thaalaatrith thandha porulellaam thakkaarkku**
**Vaelaanmai seydhar poruttu.** ***(Kural 212)***

Tiruvalluvar says 'The one who accumulates the wealth should be used to help the deserving'.

The First service of Sevabharathi Tamilnadu is *annadhanam* for the people who were affected by the lockdown due to COVID. Common kitchens were set up in Chennai, Salem, Erode, Panruti, Chidambaram towns. In Salem, *Annadhanam* was done in large scale and for 40 days food were prepared and served. In total *Annadhanam* was served in 250 places.









# இதயத்தை தொட்ட சேவை

வீடு இருக்கிறது, வாசல் இருக்கிறது. ஆனால் வருமானம் இல்லை என்று வாடினர் பலர். உதாரணமாக, விழுப்புரம் மாவட்டம், முகையூர் அருகில் உள்ள கிராமத்தில் வயதான கணவன், மனைவி இருவரும் டீக்கடைக்கு தண்ணீர் சுமந்து கொடுத்து அந்த வருமானத்தில் வாழ்க்கையை நடத்தி வந்தனர். முழு ஊரடங்கால் டீக்கடை திறக்கவில்லை; இவர்களுக்கும் வேலையில்லை. அடுத்த வேளை சோற்றுக்கு என்ன செய்வது என்று தவித்தபோது, சேவாபாரதி பொறுப்பாளர்கள் உடனடியாக மளிகை தொகுப்புகளைக் கொடுத்தனர். அதனால் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட சுமார் 25,000 குடும்பங்களுக்கு மளிகைத் தொகுப்புகள் வழங்கப்பட்டன.











# HEART TOUCHING SERVICE

People had homes and things but no income during the period and became depressed and frustrated. For example, in Villupuram District, a village near Mugaiyur, an old couple were earning meagerly through supplying water to a tea shop and due to the lock down the tea shop was closed and the elderly couple lost their source of income and pushed to starvation and were not certain about getting food for atleast once a day. At that time, volunteers from Sevabharathi gave grocery kit to them and they were very happy seeing the provisions. Like this many families were given grocery kits. Overall grocery kits were provided to 25,000 families affected during the COVID period.






சேவாபாரதி தமிழ்நாடு

யாதும் ஊரே யாவரும் கேளிர்

# புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் நமது சகோதரர்களே!

கொரோனா பொது முடக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்தான். வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், வெளியூர்களைச் சேர்ந்தவர்கள் என பலரும் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளாகினர். அவர்களுக்கு வேண்டிய உணவு, மளிகைப் பொருட்கள் வழங்கி, நாம் அனைவரும் பாரதமாதாவின் மைந்தர்கள் என்பதை சேவாபாரதி தொண்டர்கள் நிரூபித்தனர்.

# MIGRATED LABOURERS ALSO OUR BROTHERS

Mainly the migrated people from other states and other places are the most affected due to the covid pandemic. Our Sevabharathi volunteers provided adequate groceries to them and proved once that all are sons of Bharat.










# மனம் மகிழ்ந்த மாற்றுத்திறனாளிகள்

கொரோனா பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் இழந்து மூலையில் முடங்கிப்போன மாற்றுத் திறனாளிகளையும் அணுகி அவர்களுக்குத் தேவையான மளிகைத் தொகுப்புகளையும் கொடுத்து மனிதநேயத்திற்கு உதாரணமாகத் திகழ்ந்தனர் சேவாபாரதி தொண்டர்கள்.

# HEART PLEASED PHYSICALLY CHALLENGED

Sevabharathi volunteers supported the physically challenged as well by giving necessary grocery kits to them and became an example on humanitarian service.







# திருநங்கைகளும் நமது உறவினர்களே

ஆண்டவன் படைத்த படைப்பில் பாதியாய் உதித்து, உறவுகளைப் பிரிந்து நிற்கதியாய் நிற்கும் திருநங்கைகளையும் தம் உறவாக எண்ணி, அவர்களுக்கும் தேவையான மளிகைத் தொகுப்புகளை கொடுத்து உதவி செய்தனர் சேவாபாரதி தொண்டர்கள்.

# TRANSGENDERS ARE ALSO OUR RELATIVES

Sevabharathi volunteers gave necessary grocery kits to the people who have been transgenders by god's creation and separated on relationship, considering them as our relatives.










# பண்பு மாறாத குறிஞ்சி மக்கள்

குறிஞ்சி நிலத்தில் வாழும் மலைவாழ் மக்கள் இன்னும் பண்பு மாறாமல் வாழ்வதைக் காண முடிகிறது. ஓசூர், பேரிகைக்கு அருகிலுள்ள குத்திக்காடு மலைக் கிராமம். அந்த கிராமத்திற்கு மளிகைத் தொகுப்புகள் கொடுக்கச் சென்றபோது, அங்கிருந்த ஒரு தாய், சேவாபாரதி பொறுப்பாளர்களிடம் ஒரு ராகி மூட்டையை கொடுத்து, “எங்களுக்கு உதவி செய்ய வந்த உங்களை வெறும் கையோடு அனுப்ப மாட்டோம். இதை அவசியம் எடுத்துச் செல்ல வேண்டும்” என்று கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தார். இறைவன் குடிசையிலும் வாழ்கிறான் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

# UNCHANGED CULTURE ATTRIBUTES OF KURINJI PEOPLE

Kuthikad, a tribal village near Hosur. When our volunteer went there to give grocery kit, a woman from that place offered a bag of Ragi and compelled our volunteer to take the ragi bag by telling that she would not allow the volunteer to go empty handed who came to help her. She won all our hearts and proved humanity prevails among the poorest poor too. This is an example that GOD lives in the huts also. We see tribal people who live in the hilly places are still maintaining their old culture and attributes.












# வற்றாத மனிதநேயம்

எந்தப் பொருளை யார் கொடுத்தாலும் வாங்கிக் கொள்வதும், இன்னும் வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் மனித சுபாவம். அதிலும் பேரிடர் நேரத்தில் இந்த எதிர்பார்ப்பு அதிகமாகவே இருக்கும். ஆனால் இதற்கு மாறாக பல சம்பவங்கள் நடைபெற்றதை நாம் நேரிடையாகப் பார்க்க முடிந்தது. அதில் உதாரணத்திற்கு ஒன்று. ஈரோடு ரங்கம் பாளையம் அருகில் உள்ளது சத்யா நகர். அங்கு கட்டிட வேலை செய்பவர்களுக்காக மளிகைத் தொகுப்புகள் வழங்கப்பட்டன. அதை வாங்கியவர்கள் அருகில் இருந்த இரு குடும்பங்களைச் சுட்டிக்காட்டி, “எங்களுக்கு ரேஷன் கார்டு இருக்கிறது, அதன்மூலம் அரிசி உள்ளிட்ட பொருட்களும் கிடைத்து விட்டன. ஆனால் அவர்களுக்கு ரேஷன் கார்டு இல்லை. அரிசியும் உணவுப் பொருட்களும் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு இல்லை என்றாலும் பரவாயில்லை. அவர்களுக்குக் கொடுங்கள்” என்று சொல்லி, தங்களுக்குக் கிடைத்த மளிகைப் பொருட்களை அந்த இரு குடும்பங்களுக்குக் கொடுக்க வைத்தனர்.

# HUMANITY STILL PREVAILS

It is human nature to get whatever one gives and expect more. Even more so in the event of disaster, this expectation will be high. But on the contrary we were able to see directly many incidents that took place. For example, Sathya Nagar at Rangapalayam, Erode grocery kits were given to construction workers at that place. Two families who received the kits, pointed out two other families living nearby and mentioned “we have ration card and we got rice and other things but those people didn’t have ration card and suffering without rice and groceries”. They ensured groceries to those families by offering the groceries provided to them.



# ஆதரவற்ற மூத்த குடிமக்களுக்கு சேவை

ஓடி ஓடி உழைத்த கரங்கள் ஓசையின்றி அமைதியாக தனிமையில் தற்போது வாடி நிற்கும் ஆதரவற்ற மூத்த குடிமக்களைத் தேடிக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான மளிகைத் தொகுப்புகளை கொடுத்து சேவாபாரதி தொண்டர்கள் உதவி செய்தனர்.

# SERVING THE DESTITUTE SENIOR CITIZENS

Sevabharathi volunteers searched and found the destitute Senior Citizens who worked hard and now living isolated and provided necessary help to them.












# தூய்மைப் பணியாளர்களுக்கு வீர வணக்கம்

கட்டுக்கடங்கா கொரோனா நோய்த் தொற்றால் வீதியில் நடமாடவே பயந்து மக்கள் வீடுகளில் முடங்கியபோது சிறிதும் தளராது பணியாற்றிய உன்னதமான மக்கள், தூய்மைப் பணியாளர்கள். இவர்களது சேவையைப் பாராட்டி சென்னையில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் ஆர்.எஸ்.எஸ். வட தமிழக அமைப்பாளர் திரு. பூ.மூ.ரவிக்குமார் அப்போதைய மாநில தமிழ் வளர்ச்சித் துறை, தொல்லியல் துறை அமைச்சர் திரு. மாஃபா கே.பாண்டியராஜன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# A SALUTE TO CLEANLINESS EMPLOYEES

While people were held up at homes due to uncontrollable Corona infections, the cleanliness workers, the front liners of Greater Chennai Corporation dedicated themselves in their service. A special event conducted in Chennai praising the services of these frontline soldiers. In this event, Sri P.M. Ravikumar, RSS Uttar Tamilnadu State Organiser and the then Minister for Tamil Language and Archaeology Sri Ma.Foi K. Pandiarajan graced and honored the event.





# மருத்துவமனை முன்கள பணியாளர்களுக்கு பாராட்டு

சேலம், ஆத்தூர், வாழப்பாடி அரசு மருத்துவமனைகளில் ஒப்பந்த ஊழியர்கள், ஆம்புலன்ஸ், பிணவறைப் பணியாளர்கள் சுமார் 1,100 பேரின் சேவையைப் பாராட்டி மளிகைத் தொகுப்புகள் வழங்கப்பட்டன.

# APPRECIATION TO FRONTLINE WORKERS

Grocery kits were given to nearly 1,100 frontline workers who were contract employees of Salem, Attur and Vazhapadi Govt. Hospitals.









# நமக்கு நாமே பாதுகாப்பு - முகக் கவசம்

நோய்த் தொற்றுக்கு அடிப்படைக் காரணம் முகக் கவசம் அணியாததுதான். 'நான் திடக் காத்திரமாக இருக்கிறேன். என்னை நோய் அண்டாது' என்ற தவறான கருத்தால் பலர் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகினர். இதை சேவாபாரதி தொண்டர்கள் மக்களுக்குப் புரிய வைப்பதற்காக இலவசமாக முகக் கவசம் விநியோகம் செய்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்தனர்.

# PROTECT OURSELVES - MASKS

The main reason for the spread of the infection was mainly due to not wearing of face masks. Many people were infected due to wrong notions that they are healthy and the infection would not affect them. To create awareness, Sevabharathi volunteers provided free masks to the people and highlighted the importance of self sanitation also.










# நம்பிக்கை அற்றவர்களுக்கு நம்பிக்கை

கொரோனா பொது முடக்கத்தால் வருமான மின்றிப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மிகுந்த மன உளைச்சல் அடைந்திருந்தனர். இன்னும் சிலருக்கு மருத்துவ விவரங்கள் தேவைப் பட்டன. அவர்களுக்கு ஆன்லைன் மூலமாக ஆலோசனைகள் அளிக்கப்பட்டன. இதற்காக இரண்டு இலவச தொலைபேசி உதவி எண்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கர்ப்பிணி பெண்ணிற்கும், வருமானம் இன்றி பாதிக்கப்பட்டு இறுதி சடங்கு செய்ய முடியாமல் தவித்த ஒருவருக் கும் உரிய நேரத்தில் சேவாபாரதி தொண்டர் கள் செய்த உதவி குறிப்பிடத்தக்கது.

# HOPE TO PEOPLE WITHOUT HOPES

People who were affected economically during the covid and people who were affected by covid infections, were in mentally depressed condition. Some people needed details on hospitals and medicines. Free consultation were given to them through online counseling. Towards this two help line numbers were introduced. It is to be noted that Sevabharathi volunteers offered timely help to pregnant women and the poor family who are unable to perform their dear ones last rites.



# அற்புத ஹோமியோ மருந்து - 'ஆர்சனிக்கம் ஆல்பம்'

கொரோனா நோய்த் தொற்றை தடுப்பதில் மிகப் பெரிய பங்கு வகித்தது ஆர்சனிக்கம் ஆல்பம் 30C என்ற ஹோமியோ மருந்து. இதனை சேவாபாரதி தொண்டர்கள் நகரங்கள், கிராமங்கள் தோறும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கினர். சுமார் 14,18,950 நபர்கள் இதனால் பலன் பெற்றுள்ளனர்.

# ARSENICUM ALBUM- A WONDERFUL HOMEO MEDICINE

Arsenicum Album 30c played a vital role in controlling the corona virus infection. Sevabharathi volunteers distributed Arsenicum Album medicine at free of cost to the people in every town and villages. About 14,18,950 people were benefited.








# உயிருக்கு ஆபத்து - ஆனாலும் சேவையில் தளர்வில்லை

கொரோனா நோய்த் தடுப்பில் கபசுரக் குடிநீர் பெருமளவு உதவி செய்தது. இதை சேவாபாரதி தொண்டர்கள் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் தொடர்ந்து ஐந்து நாட்கள் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கினர். சுமார் 3,68,550 நபர்கள் இதன் மூலம் பயன்பெற்றுள்ளனர்

# DANGER TO LIFE - BUT NOT RELAXED IN SERVICE

Kabasura kudineer helped a lot in preventing corona infection. Sevabharathi volunteers distributed kabasura kudineer free of cost in every town and villages for consecutive 5 days and overall 3,68,550 people were benefited from this.













# உயிர் காக்கும் உன்னதக் கருவிகள் நன்கொடை

## ஆக்சிஜன் செறிவூட்டிகள்

ஆக்சிஜன் பற்றாக்குறையால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனடித் தேவையான கருவி ஆக்சிஜன் செறிவூட்டி. சேவா இன்டர் நேஷனல், ராஷ்ட்ரீய சேவாபாரதி மூலம் பெறப்பட்ட 220 ஆக்சிஜன் செறிவூட்டிக் கருவிகள், தமிழகத்தின் பல்வேறு பகுதி களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலை யங்கள், தர்ம சிந்தனையுடன் செயல்படும் தனியார் மருத்துவமனைகளுக்கு அவை நன்கொடையாக வழங்கப்பட்டன.

## OXYGEN CONCENTRATORS

Sevabharthi organized 220 oxygen concentrators obtained through Sewa International and Rastriya Sewa Bharati for the people who needed oxygen on emergency. These concentrators were donated to Government hospitals, primary health centres and hospitals run by trust.















# DONATING LIFE SAVING DEVICES

## வெண்டிலேட்டர்கள்

சேவா இன்டர்நேஷனல், ராஷ்ட்ரீய சேவா பாரதி மூலம் பெற்ற நான்கு வெண்டிலேட்டர்கள் (செயற்கை சுவாசக் கருவிகள் தலா ரூ. 5.5 லட்சம் மதிப்புள்ளவை) சென்னை, காஞ்சிபுரம், வேலூர், சேலம் பகுதிகளில் செயல்படும் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டன.

## VENTILATORS

Ventilator devices (each costing Rs. 5.5 lakhs) received through Sewa International and Rastriya Sewa Bharati, were donated to hospitals at Chennai, Kanchipuram, Vellore and Salem.










# பிராண சேவா (ஆக்சிஜன் வங்கி)

கொரோனா நோயால் பாதிக்கப்பட்டவர்களில் தேவைப்படுவோருக்காக ஆக்சிஜன் செறிவூட்டிகள் இலவச சேவையாக வழங்கப்பட்டுவருகின்றன. மருத்துவரின்ஆலோசனைப் படி ஒரு வாரத்திலிருந்து இரண்டு வாரங்கள் வரை இவை பயன்படுத்த வழங்கப்படுகின்றன. சென்னை, காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், ஒசூர், சேலம், ஈரோடு, ஆத்தூர், சிதம்பரம், மதுராந்தகம், தாம்பரம் ஆகிய ஊர்களில் இந்த சேவை தொடர்கிறது.

# PRANA SEVA (OXYGEN BANK)

Oxygen Concentrators provided free of cost to the people who have been affected by Corona virus and in need of oxygen concentrators. These are given based on doctor advise and for the period of one to two weeks use. This service is being done in Chennai, Kanchipuram, Vellore, Tirupathur, Hosur, Salem, Erode, Attur, Chidambaram, Maduranthagam and Tambaram.









# கொரோனாவை ஒழிப்போம்; பாரதத்தை காப்போம் விழிப்புணர்வு பிரச்சாரம்

அரசுடன் இணைந்து சேவாபாரதி விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டது. சென்னையில் மேடவாக்கம், பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் முக்கிய சாலைச் சந்திப்புகளில் விழிப்புணர்வு ஓவியங்கள் வரையப்பட்டன.

# ELIMINATE CORONA; SAVE THE NATION AWARENESS CAMPAIGN

In association with the Government, Sevabharathi involved in the awareness program. In Chennai, awareness pictures were drawn in important junctions in Medavakakam and Pallikaranai.






# கொரோனா தனிமைப்படுத்துதல் மையம்

சேவாபாரதி தமிழ்நாடு சார்பாக கொரோனா தனிமைப்படுத்துதல் மையம், சென்னை வியாசர்பாடியில் செயல்பட்டது. 50 படுக்கைகள் கொண்ட, இந்த மையத்தில் முழு நேர மருத்துவர், செவிலியர்கள், சேவைப் பணியாளர்கள் ஆகியோருடன், முழு வசதியுடன் இம்மையம் செயல்பட்டது. கொரோனா நோயால் பாதிக்கப் பட்டு வீட்டில் தனிமையில் இருக்குமாறு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் இங்கு தங்கி சிகிச்சை பெற்றனர்.

# CORONA CARE CENTRE

Sevabharathi Tamilnadu operated a Covid care centre at Vysarpadi, in Chennai. This centre had 50 beds and with full time Doctor, Nurses and service employees and with required infrastrucutre. Those people who have been affected by Corona virus and advised isolation at home by Doctors, got admitted here and took treatment free of cost.






# சமயத்தில் கைக்கொடுத்த சேவாபாரதி

சேலம், ஆத்தூர், மேட்டூர், கருமந்துறை, தலைவாசல் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு கட்டில் பற்றாக்குறை இருப்பதாகவும், பல நோயாளிகள் தரையில் படுத்திருப்பதாகவும் தகவல் கிடைத்தது. உடனடியாக களத்தில் இறங்கிய சேவாபாரதி தொண்டர்கள் மொத்தம் 250 செட் கட்டில், மெத்தை, தலையணை போன்றவற்றை வழங்கினர். கட்டில்கள் தயார் செய்து கொடுக்கக் கொடுக்க, நோயாளிகள் தரையிலிருந்து மாறி கட்டிலில் படுப்பதைப் பார்க்க முடிந்தது. இதற்கு நோயாளிகளும், மருத்துவமனை நிர்வாகிகளும் நன்றி தெரிவித்தனர். .

# TIMELY HELP BY SEVABHARATHI

Sevabharathi received information that many patients were lying on the floor in some of the Govt. hospitals in Salem, Attur, Mettur, Karumandhurai and Thalaivasal due to shortage of beds. Immediately Sevabharathi volunteers got into action and arranged 250 sets of cots, beds and pillows to them. It was a timely help by Sevabharathi and appreciated by patients and authorities.









# சென்னை மாநகராட்சியுடன் இணைந்து சேவைப்பணி

சென்னை பெருநகர மாநகராட்சியுடன் இணைந்து, சென்னை குடிசைப் பகுதிகளில் நோய் பரவாமல் இருக்க விழிப்புணர்வு பிரச்சாரம் செயல்படுத்தப்பட்டது. 139, 140, 180 ஆகிய வட்டங்களில் சேவாபாரதி தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று, வீட்டில் உள்ளவர்களிடம் நோய் தொற்று இருக்கிறதா என்று ஆராய்ந்து, அறிகுறியுள்ளவர்களைப் பரிசோதனை முகாம்களுக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டனர். 50க்கும் மேற்பட்ட தொண்டர்கள் மூன்று மாத காலம் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

# SERVICE IN ASSOCIATION WITH GREATER CHENNAI CORPORATION

Awareness programs were conducted in slum areas to prevent the spread of the disease in Chennai by working with Greater Chennai Corporation. Sevabharathi volunteers went to every house in 139, 140, 180 divisions and checked the people whether they were infected with virus and sent those people who were with symptoms, to testing labs. More than 50 volunteers were involved in this activity for three months.










# ‘ஆயுஷ்-64’ சேவை

மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் அறிமுகப்படுத்திய ‘ஆயுஷ்64’ மாத்திரைகள், கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீடுகளில் தங்கி சிகிச்சை பெற்றவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இதற்காக எல்லா ஊர்களிலும் மையங்களை ஏற்படுத்தி, தொண்டர்களுக்கு இணையதளம் மூலம் பயிற்சி அளித்து மாத்திரைகள் விநியோகம் செய்யப்பட்டன.

# AYUSH 64 SERVICE

Ayush Ministry of Central Government introduced Ayush 64 tablets and the same have been given free of cost to people who were getting treatment from home. Coordination centers were formed in all the towns and volunteers were trained online and medicines distributed.








# கூட்டுப் பிரார்த்தனை

நாம் நமக்காகச் செய்யும் பிரார்த்தனையை விட மற்றவர்களுக்காகச் செய்யும் பிரார்த்தனைக்கு சக்தி அதிகம். அதிலும் கூட்டாக செய்யும் பிரார்த்தனைக்கு இன்னும் சக்தி அதிகம். நோயால் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைய சேவாபாரதி தொண்டர்கள் ஆன்லைன் மூலம் கொரோனா முதல் மற்றும் இரண்டாவது அலை சமயத்தில் தொடர்ந்து 48 நாட்கள் வீதம் பஜனையுடன் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். மொத்தம் 265 நபர்களுக்காக பிரார்த்தனை செய்யப்பட்டது.

# GROUP PRAYER

Prayer which we do for others is more powerful than the prayer we do for ourselves and further the group prayer is still more powerful. Sevabharathi volunteers performed group prayers along with bhajan for 48 days during both 1st and 2nd wave towards recovery of patients affected by the disease and overall prayers conducted for 265 patients.








# சேவைதான் குறிக்கோள்

‘மக்கள் சேவையே மகேசன் சேவை’ என்று செயல்பட்டுவரும் அமைப்பு சேவாபாரதி. இதன் சேவைக்கு ஜாதியோ, மதமோ ஒரு பொருட்டல்ல. இந்த உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளிலும் கடவுள் இருக்கிறார்; அதை எல்லாவற்றையும் பேணிக் காப்பது நமது கடமை என்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளது சேவாபாரதி.

# SERVICE IS THE GOAL

Sevabharathi is an organization that operates on service to the people is equal to service to the god. For this service, caste and religion is immaterial. God is present in all the living things on the earth. It has full belief that preserving all of these is our duty.











# மாலை நேரப் பாடசாலைகள்

அன்னசத்திரம் கட்டுவது, ஆலயங்களை எழுப்புவதை விட ஏழை ஒருவனுக்கு கல்வி அளிப்பதே சிறந்தது என்கிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதி. தமிழகத்தின் பல கிராமப் பகுதிகளில் மாலைநேரக் கல்வி மையங்களை சேவாபாரதி தமிழ்நாடு நடத்தி வருகிறது. இதன்மூலம் பள்ளி முடிந்தவுடன் மாணவ, மாணவிகளின் கவனம் சிதறாமல் படிப்பில் கவனம் செலுத்த முடிகிறது.












# EVENING STUDY CENTRES

Maha Kavi Subramaniya Bharathiyar says it is better to educate the poor than to construct temples and free food distribution centres. Sevabharathi Tamilnadu runs evening free study centres in many rural areas of Tamil Nadu. Through this, students are able to concentrate on their studies after the school hours without getting distracted.










# இலவச நடமாடும் மருத்துவ ஊர்திகள்

சேவாபாரதி இரு நடமாடும் மருத்துவ ஊர்திகள் மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளாக வட சென்னை, தென் சென்னை பகுதிகளில் மருத்துவ சேவை ஆற்றி வருகின்றன. மருத்துவர், செவிலியர், மருந்தாளுனர், பிற ஊழியர்களுடன் தினசரி நான்கு குடிசைப் பகுதிகளுக்குச் செல்கின்றன. மருத்துவ குழுவினரின் பரிசோதனையின் மூலம் மற்றும் இலவச மருந்து விநியோகம் மூலமாக பரவலான நோய்கள் அப்பகுதிகளில் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. தினசரி 200 நோயாளிகள் இதன்மூலம் பயன்பெற்று வருகின்றனர். சேவா இன்டர்நேஷனல், சோழா எம்.எஸ். ஜெனரல் இன்ஸ்சூரன்ஸ் நிறுவனங்கள் அளித்த நிதியுதவி மூலம் இச்சேவை நடைபெற்றது.







# FREE MOBILE MEDICAL VANS

Two mobile medical vans operating in North Chennai and South Chennai doing medical services for the last five years. With a team comprising Doctor, nurse, pharmacist and coordinator the MMVs visit four slum areas daily. Due to our regular testing and free medicines, the common disease have been kept under control. 200 patients benefited daily from this. The service was funded by Sewa International and Chola MS General Insurance.








# கிராம முன்னேற்றமே தேச முன்னேற்றம்

சேவாபாரதி தமிழ்நாடு ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சிக்காக சமுதாய நல சேவைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. சமுதாய நல சேவைத் திட்டம் மூலம் தேர்ந்தெடுக்கப் படும் கிராமங்களில் கல்வி, ஆரோக்கியம், சுயசார்பு, சமுதாய நலன் ஆகிய நான்கு துறைகள் மூலம் வளர்ச்சிக்கு வித்திட்டு வருகிறது. ONGC நிறுவனம் அளித்த CSR நிதியின் மூலமாக திருவள்ளூர் மாவட்டத்தில் இப் பணிகள் நடைபெற்றன.

# VILLAGE DEVELOPMENT IS NATIONAL DEVELOPMENT

Sevabharathi Tamilnadu is implementing Social welfare service program for the overall community development. The social welfare programs is sowing the seeds for development in the villages selected by us, in the areas of education, health, self reliance and social welfare. These services were carried out in Tiruvallur district with CSR funds provided by ONGC.











# இந்த நாட்டில் யாரும் அனாதை இல்லை

அனாதை இல்லங்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்த விரும்பாத நல்ல உள்ளங்களின் சிந்தனையில் உதித்த வார்த்தையே ‘அன்பு இல்லங்கள்’. வடதமிழகத்தில், பெண்களுக்காக மூன்று இல்லங்களும் ஆண்களுக்காக ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. மொத்தம் 105 சிறுவர், சிறுமிகள் இவற்றில் தங்கி, படித்து வருகிறார்கள். இங்கு படித்து முடித்த பலர் இன்று நல்ல பணியில் உள்ளனர். பலருக்கு திருமணம் நடைபெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

# NO ONE IS AN ORPHAN IN THIS COUNTRY

Love homes (Anbu Illam) are the word that popped into the minds of good souls who did not want to use the word orphanages. There are 3 homes for girls and one home for boys in North parts of Tamilnadu . A total of 105 boys and girs are staying and studying in it. Many who have graduated are in good employment. Many are married and living happily.









# பொருளீட்டும் தையல் கற்ற நாயகிகள்

மகளிர் மத்தியில் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு இலவச தையல் பயிற்சி மையங்களை சேவாபாரதி செயல்படுத்தி வருகிறது. இங்கு பயிற்சி பெற்ற மகளிர்கள் சுயதொழில் தொடங்கி நல்ல முறையில் வருமானம் ஈட்டி வருகின்றனர். இது அவர்களது குடும்பப் பொருளாதாரம் மேம்பட உதவியாக இருக்கிறது.

# TAILORING AS MEANS TO EARN

Sevabharathi is running free tailoring training centers to promote economic development among women. Trained women from here are starting their own business and earning an income. This has helped to improve their family economy.










# கணினிக் கல்வி

இந்த அறிவியல் உலகத்தில் கணினி அறிவு மிகவும் இன்றியமையாதது. நம் தினசரிப் பணிக்கும், வேலைக்கு செல்வதற்கும், இது மிகவும் பயனளிக்கிறது. இதற்காக பழவேற்காடு கிராமத்தில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கணினிப் பயிற்சி மையம் நடைபெற்று வருகிறது. இங்கு பயிற்சி பெற்ற பலர் பல நிறுவனங்களில் பணியாற்றி வருகிறார்கள் என்பது பெருமைக்குரிய விஷயம்.

# COMPUTER EDUCATION

Computer knowledge is very essential in this scientific world. It is very useful for our daily work and employment. For this purpose, a computer training center has been running in the fishing village of Pazhaverkadu for more than 10 years. It is a matter of pride that many of those trained here are employed in many companies.







## பொம்மை தொழிலாளர்களுக்கு க...

சேவாபாரதி அமைப்பு வழங்கியது



## சேவாபாரதி அமைப்பு சார்பில்
## அரசு மருத்துவமனைகளுக்கு 5 ஆக்சிஜன் செறிவூட்டிகள்

செங்கல்பட்டு, ஜூன் 2: சேவாபாரதி அமைப்பு சார்பில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு 5 ஆக்சிஜன் செறிவூட்டிகள் வழங்கப்பட்டன.

...பட்டன.

## ...யுர்வேத மாத்திரை
## ...பாரதி வழங்கல்

## சேவாபாரதி கடலூர் மாவட்...
## 3 லட்சம் பயனாளிகளுக்கு ஆ...



## நரிக்குறவர்களுக்கு இல...



தமிழ்நாடு சேவா பாரதி அமைப்பு சார்பில் ஈரோடு மாவட்டம் ... மாற்றுத்திறனாளிகளுக்கு ... பொருட்கள் ...



## சென்னையில் இருந்...



## ஆத்தூர் சேவாபாரதி அமைப்பு சார்பில்
## பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் விநியோகம்

தினத்தந்தி — 20/4/20

இந்து தமிழ் திசை

உணவு முறையும் காரணம்: அமைச்சர் பாண்டியராஜன் பேச்சு



சென்னை

இந்தியாவில் கரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக உயிரிழப்பு குறைவாக இருப்பதற்கு நம்முடைய உணவு முறையும் காரணம் என தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் க. பாண்டியராஜன் பேசினார்.

WRITE A COMMENT

FOLLOW US




Video




Video




Video




Video




Video

# COVID RELIEF ACTIVITIES

| | | |
|---|---|---|
| Free Food served Places<br>250 | Number of Grocery kits distributed<br>25,000 | Senior Citizens Help<br>5,722 |
| Mask distributed<br>28,544 | Homeo Medicine distributed<br>14,18,950 | Kabasura Kudineer Distributed<br>3,68,551 |
| Ayurvedha Kashayam distributed<br>1,000 | Ventilators distributed<br>4 | Oxygen Concentrators Distributed<br>220 |
| Pulse Oximeter distributed<br>400 | Revenue Districts Served<br>15 | Panchayat Blocks Served<br>76 |
| Places Served<br>1,090 | Volunteers Involved<br>1,850 | Total Beneficiaries<br>21,88,000 |

***Contributions on***

| | |
|---|---|
| Bank | : Indian Bank |
| Branch | : Dr. Alagappa Road, Chennai |
| Account Name | : Sevabharathi Tamilnadu |
| Account Number | : 6573642589 |
| IFSC Code | : IDIB000D036 |
| Account Type | : Current Account |


***Contact :***

73050 87891
94885 66036

***Reach us on***

'Seva', No. 79, 2nd Floor,
Dr. Alagappa Road, Purasaiwalkam,
Chennai - 600 084.

Mail id: info@sevabharathitn.org
Website: www.sevabharathitn.org
@Sevabharathitamilnadu